# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/33 - 2020 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.20

*2163/33 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 5/2011* (ii)

**2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டம்**

*2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 13ஆம் மற்றும் 14ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 89ஆம் பிரிவின்கீழ் வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜோன்ஸ்டன் சேவியர் பெர்ணாந்து,
வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

பத்தரமுல்ல,
*2020*, பெப்புருவரி *20*.

ஒழுங்கு விதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள், *2020*ஆம் ஆண்டின் *1*ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் (பாவனையாளர் கட்டண) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்-

(அ) *2020*, பெப்புருவரி *20* ஆந் திகதிய *2163/25*ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், *2008*ஆம் ஆண்டின் *40* ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் *11*ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட, "தெற்கு பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை (கொட்டாவ - மத்தள)";

(ஆ) 2019, நவெம்பர் 08 ஆந்திகதிய 2148/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 11ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட, "அந்தரவெவ - அம்பாந்தோட்டை பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை";

(இ) 2019, நவெம்பர் 08 ஆந்திகதிய 2148/46ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும்,2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 11ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட, "வெளிச்சுற்றுவட்ட பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை"; அத்துடன்

(ஈ) 2013, ஒற்றோபர் 12 ஆந்திகதிய 1831/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2008ஆம் ஆண்டின்40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 11ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட, "கொழும்பு - கட்டுநாயக்க பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை".

3. (1) பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையில் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதி, அத்தகைய பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை அத்தகைய சாரதியினால் பயன்படுத்தப்படுவது தொடர்பில், இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணையின் பாகம் "அ" என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வீதத்தில் பாவனையாளர் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டணமானது, பாவனையாளர் கட்டண நெடுஞ்சாலையின் முழுத்தூரம் அல்லது அதன் பாகம் தொடர்பில் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த வாகனங்களுக்கு வெவ்வேறு பாவனையாளர் கட்டணங்கள் ஏற்புடையனவாகலாம்.

(4) பாவனையாளர் கட்டணம் பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) நேரடியாக, காசாகச் செலுத்துதல்; அல்லது
(ஆ) வாகனத்துடன் இணைக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "E-tag" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) உபாயமொன்றினூடாக இலத்திரனியல் ரீதியில்.

4. (1) பெயர்குறிக்கப்பட்ட இடமொன்று தவிர்ந்த இடைமாற்றப்பாதை ஒன்றிலிருந்து பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் உட்பிரவேசிக்கும் E-tag தவிர்ந்த வாகனம் ஒவ்வொன்றினதும் சாரதி ஒவ்வொருவரும், பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையில் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்படமுன்னர், அத்தகைய இடைமாற்றப் பாதையில் கடமையிலிருக்கும் பணப்பொறுப்பாளரிடமிருந்து நுழைவுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதி 4 (1) இன்கீழ் நுழைவுச் சீட்டொன்றைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு சாரதியும், எந்த இடைமாற்றப் பாதைக்கூடாக அல்லது பெயர்குறிக்கப்பட்ட இடத்துக்கூடாக அத்தகைய பாவனையாளர் கட்டண நெடுஞ்சாலையைவிட்டு வெளியேறுவதற்கு உட்கருதுகின்றாரோ, அந்த இடைமாற்றப் பாதையின் அல்லது பெயர் குறிக்கப்பட்ட இடத்தின் கொடுப்பனவு நிலையத்தை அடையும்வரை அவர் அத்தகைய நுழைவுச்சீட்டை அவரது உடைமையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

(3) வாகனமொன்று அத்தகைய பாவனையாளர் கட்டண நெடுஞ்சாலையைவிட்டு வெளியேறும் நோக்கத்துக்காக இடைமாற்றப் பாதையொன்றின் அல்லது பெயர்குறிக்கப்பட்ட அமைவிடமொன்றின் கொடுப்பனவு நிலையத்தை வந்தடைகின்றபோது, அவ்வாகனத்தின் சாரதி-

(i) அவர் எந்த இடைமாற்றப் பாதையின் ஊடாகப் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் பிரவேசித்தாரோ, அந்த இடைமாற்றப் பாதையில் பெற்றுக்கொண்ட நுழைவுச்சீட்டைப் பணப்பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்; அல்லது

(ii) பெயர்குறிக்கப்பட்ட இடம் ஒன்றிலிருந்து உட்பிரவேசித்துள்ளவிடத்து, அவர் எந்த பெயர்குறிக்கப்பட்ட அமைவிடத்துக்கூடாகப் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் உட்பிரவேசித்தாரோ, அந்த பெயர்குறிக்கப்பட்ட அமைவிடத்தைப் பணப்பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) பணப்பொறுப்பாளர், செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகையை காசாகச் செலுத்தும் பாவனையாளர் கட்டணச் சேகரிப்பு ஒழுங்கையைப் பயன்படுத்தும் வாகனமொன்றின் சாரதிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் சாரதி அத்தகைய இடைமாற்றப்பாதையினூடாக அல்லது பெயர்குறிக்கப்பட்ட இடத்தினூடாகக் கடந்துசெல்ல அனுமதிக்கப்படுவதற்குமுன்னர், அத்தகைய தொகையைச் செலுத்துதலும், அத்தகைய கொடுப்பனவு தொடர்பிலான பற்றுச்சீட்டொன்றைப் பணப்பொறுப்பாளர் வழங்குதலும் வேண்டும்.

(5) சாரதி–

(அ) நுழைவுச்சீட்டை ஒப்படைக்க முடியாதிருக்குமிடத்து; அல்லது

(ஆ) பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையில் எந்த பெயர்குறிக்கப்பட்ட இடத்தினூடாகப் பிரவேசித்திருந்தாரோ அந்த பெயர்குறிக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டத் தவறுகின்றவிடத்து,

ஆகக்கூடிய சாத்தியமான உட்பிரவேச மையத்திலிருந்து உள்ளபடியான வெளிச்செல்கை மையம் வரையான பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையின் முழுத்தூரத்துக்காகவும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் "அ" இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களிலான கட்டணமொன்றும் விதிக்கப் படுதல் வேண்டும்.

5. (1) (இதனகத்துப்பின்னர் "E-tag" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் ரீதியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு விரும்புகின்ற ஒரு வாகனத்தின் சொந்தக்காரர் அல்லது சாரதி ஒருவர், (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் (இதனகத்துப்பின்னர் "ETCS" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் ஆயவரிச் சேகரிப்பு முறைமை பாவனையாளர் கட்டணக் கணக்கொன்றைத் திறப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) E-tag பாவனையாளரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதிவுக்கான விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மேல் அதிகாரசபையானது, ETCS கணக்குத் தொடர்பான தகவலுட்பட விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல் பற்றி திருப்தியுறுவதன்மேல், அத்தகைய ஆளை E-tag பாவனையாளராகப் பதிவு செய்யலாம் என்பதுடன், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக அவருக்கு E-tag ஒன்றையும் வழங்கலாம்.

(4) ஒவ்வொரு E-tag பாவனையாளரும் (இதனகத்துப்பின்னர் "ETCS வாடிக்கையாளர் உடன்படிக்கை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் ஆயவரி சேகரிப்பு முறைமை பாவனையாளர் கட்டண வாடிக்கையாளர் உடன்படிக்கையொன்றை, அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, செய்துகொள்ளுதல் வேண்டும்.

(5) வழங்கப்பட்ட E-tag ஒவ்வொன்றும் வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடியுடன் பொருத்தப்படுதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு E-tag பாவனையாளரும் (இதனகத்துப்பின்னர் "ETC ஒழுங்கை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் பாவனையாளர் கட்டணச் சேகரிப்பு ஒழுங்கையைப் பயன்படுத்தும் போது எல்லா நேரங்களிலும் ETCS கணக்கில் போதிய வரவு மீதியைப் பேணுதல் வேண்டும்.

(7) போதியளவு வரவு இல்லாதிருக்கும் விடயத்தில், E-tag பாவனையாளர் ETCS கணக்கின் வரவு மீதியை அதிகரிக்கலாமென்பதுடன், அத்தகைய அதிகரிப்பின் செய்முறைப்படுத்தல் நேரம், E-tag பாவனையாளர் ETC ஒழுங்கையைப் பயன்படுத்துவதற்கு இயன்றவராகவிருக்கக்கூடிய நேரத்துக்கு முன்னர் ஒரு மணித்தியாலத்துக்குக் குறைவாகவிருத்தலாகாது.

(8) E-tag பாவனையாளர் ஒவ்வொருவரும், E-tag ஆனது முறையான தொழிற்படு நிலையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய E-tag இற்கான ஏதேனும் சேதம் அல்லது இழப்பு பற்றி அதிகாரசபைக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

6. (1) பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் போதிய நிதி வரவைக் கொண்ட E-tag பாவனையாளர் ஒருவர் பெயர்குறிப்பிடப்பட்டவோர் இடம் அல்லது இடைமாற்றுப்பாதை ஒன்றிலிருந்து பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் உட்பிரவேசிக்குமிடத்து, அத்தகைய E-tag பாவனையாளர் அத்தகைய இடைமாற்றுப் பாதையின் ETC ஒழுங்கை வழியாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) E-tag பொருத்தப்பட்ட வாகனமொன்று ETC ஒழுங்கையொன்றின் மீது பயன்படுத்தப்படுமிடத்து, பாவனையாளர் கட்டணம் தன்னியக்கமாகவே ETCS கணக்குக்கெதிராகப் பற்றுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், E-tag பாவனையாளர் அதிகாரசபையின் வாடிக்கையாளர் கவனிப்பு நிலையத்திலிருந்து அத்தகைய கணக்கின் பாவனை தொடர்பான கூற்றொன்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

(3) E-tag பாவனையாளரொருவர் பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் போதிய நிதி வரவைக் கொண்டிராதவிடத்து, அத்தகைய E-tag பாவனையாளர், காசாகச் செலுத்தும் பாவனையாளர் கட்டணச் சேகரிப்பு ஒழுங்கைக்கு ETC ஒழுங்கையிலிருந்து தனது வாகனத்தைத் திசைதிருப்புதல் வேண்டும்.

7. (1) அதிகாரசபையானது, இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக தேவைப்படுத்தப்பட்ட இடங்களில் போதிய எண்ணிக்கையினவான நுழைவாயில் கதவுகள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக அவ்வாறு அமைக்கப்பட்ட நுழைவாயில் கதவுகள் அதிகாரசபையால் சொந்தமாக வைத்திருக்கப்படுதலும் தொழிற்படுத்தப்படுதலும் மற்றும் பேணப்படுதலும் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு நுழைவாயில் கதவிலும் பணப்பொறுப்பாளர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) பணப்பொறுப்பாளர் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நுழைவாயில் கதவு ஒவ்வொன்றிலும், அத்தகைய பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையைப் பயன்படுத்துகின்ற சாரதி ஒவ்வொருவரிடமிருந்தும் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் "அ" என்பதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொகையிலான பாவனையாளர் கட்டணத்தைச் சேகரிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்:

ஆயின், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் "ஆ" என்பதில் குறித்துரைக்கப்பட்ட, அத்தகைய கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்ட வகுதியைச் சேர்ந்த வாகனமொன்றைச் செலுத்துகின்ற சாரதி ஒருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

8. பணப் பொறுப்பாளர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் அன்றைய தினத்தின் கட்டணங்களின் சேகரிப்பை அதிகாரசபையால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளித்தலும், அத்தகைய தொகை தொடர்பில் பற்றுச்சீட்டு ஒன்றைப் பெறுதலும் வேண்டும்.

9. பாவனையாளர் கட்டணங்களாக அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகும் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பேணுவதற்குமான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற வாகனமொன்றின் சாரதி தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது -

(அ) முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்; அத்துடன்

(ஆ) இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான தவறொன்றின் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்,

ஆளாதலும் வேண்டும்.

11. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்திற்காக -

"பெயர்குறிக்கப்பட்ட இடம்" என்பது, வாகனமொன்றின் சாரதியொருவர் நுழைவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளாமல் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அணுக்க இடம் என்று பொருளாகுமென்பதுடன், புதிய களனி இடைமாற்றப் பாதை, பேலியகொடை இடைமாற்றப் பாதை, கட்டுநாயக்க இடைமாற்றப் பாதை மற்றும் கட்டுநாயக்க (25.80 கி.மீ.) என்பவற்றையும் உள்ளடக்கும்;

"E-tag" என்பது, இலத்திரனியல் பாவனையாளர் கட்டண ஒழுங்கை ஒன்றினூடாகக் கடந்து செல்லும்போது, இலத்திரனியல் ரீதியில் பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்தும் நோக்கத்திற்காக வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடியின் மீது நிரந்தரமாக நிறுவப்பட்ட ஓர் இலத்திரனியல் உபாயம் என்று பொருளாகும்.

"பணப்பொறுப்பாளர்" என்பது இடைமாற்றப் பாதையொன்றின் நுழைவாயிலில் அல்லது பெயர்குறிக்கப்பட்ட இடமொன்றில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் என்று பொருளாகும்.

"பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை" என்பது, கொட்டாவ (0.000 கி.மீ.) தொடக்கம் மத்தள (200.451 கி.மீ.) வரையான

தெற்கு பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை, அந்தரவெவ (0.000 கி.மீ.)( தொடக்கம் அம்பாந்தோட்டை (16.558 கி.மீ.) வரையான அந்தரவெவ - அம்பாந்தோட்டை பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை, கொட்டாவ (0.000 கி.மீ.) தொடக்கம் கெரவலப்பிட்டிய (28.867 கி.மீ.) வரையான வெளிச் சுற்றுவட்ட பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு (0.000 கி.மீ.) தொடக்கம் கட்டுநாயக்க (25.800 கி.மீ.) வரையான கொழும்பு - கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

12. இரண்டாயிரத்துப் பத்தொன்பது நவெம்பர் 08 ஆந் திகதிய 2148/ 47 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2019, நவெம்பர் 08 ஆந் திகதிய 2148/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி என்பவற்றில் வெளியிடப்பட்ட தேசிய பொதுவழிகள் (பாவனையாளர் கட்டண) ஒழுங்குவிதிகள், அவற்றின் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

அட்டவணை - பாகம் அ

(ஒழுங்கு விதி 3)

வகுதி 1 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா) (இரு அச்சாணிகளும் நான்கு சக்கரங்களும் கொண்ட வாகனங்கள்

| தூரம் | 8.7 கிமீ | 7.3 கிமீ | 6.7 கிமீ | 16.5 கிமீ | 9.35 கிமீ | 4.8 கிமீ | 5.1 கிமீ | 6 கிமீ | 8 கிமீ | 21 கிமீ | 11 கிமீ | 22 கிமீ | 12 கிமீ | 16 கிமீ | 12.4 கிமீ | 7.9 கிமீ | 9.9 கிமீ | 11 கிமீ | 15.5 கிமீ | 12.2 கிம | 9.1 கிமீ | 7.1 கிமீ | 10.3 கிமீ | 10.5 கிமீ | 20.7 கிமீ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுநாயக்க (வெளியேறல் - B4) | ஜா - எல (வெளியேறல் - B3) | கெரவலபிட்டிய (வெளியேறல் - B2) | பேலியகொட (வெளியேறல் - B1) | கடவத்த (வெளியேறல் - C4) | கடுவெல (வெளியேறல் - C3) / கொத்தலாவல (வெளியேறல் -C2) | அத்துருகிரிய (வெளியேறல் - C1) | கொட்டாவ (வெளியேறல் - A1) | கஹதுடுவ (வெளியேறல் - A2) | கெலனிகம (வெளியேறல் - A3) | தொடங்கொட (வெளியேறல் - A4) | வெலிப்பென்ன (வெளியேறல் - A5) | குருந்துகஹஹெத்தப்ம (வெளியேறல் -A6) | பத்தேகம (வெளியேறல் - A7) | பின்னதுவ (வெளியேறல் - A8) | இமாதுவ (வெளியேறல் - A9) | கொக்மதுவ (வெளியேறல் - A10) | கொடகம (வெளியேறல் - A11) | அப்பரெக்க (வெளியேறல் - A12) | பெலியத்த (வெளியேறல் - A13) | கஸகல (வெளியேறல் - A14) | அங்குனகொலபெலஸ்ஸ (வெளியேறல் - A15) | பறவக்கும்புக்க (வெளியேறல் - A16) | சூரியவெவ (வெளியேறல் - A17) | மத்தள வாயில் (வெளியேறல் - A18) | அம்பாந்தோட்டை வாயில் (வெளியேறல் - A19) |
| ஜா - எல | 150 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கெரவலபிட்டிய | 100 | 50 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பேலியகொட | 300 | 200 | 50 | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கடவத்த | 200 | 150 | 100 | 150 | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கடுவெல/கொத்தலாவல | 250 | 200 | 150 | 200 | 100 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| அத்துருகிரிய | 300 | 250 | 200 | 250 | 150 | 100 | | | | | | | | | | | | | | | | | | | | |
| கொட்டாவ | 300 | 250 | 200 | 250 | 150 | 100 | 100 | | | | | | | | | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 300 | 250 | 200 | 250 | 200 | 150 | 150 | 100 | | | | | | | | | | | | | | | | | | |
| கெலனிகம | 350 | 300 | 250 | 300 | 200 | 200 | 150 | 150 | 100 | | | | | | | | | | | | | | | | | |
| தொடங்கொட | 400 | 350 | 300 | 350 | 300 | 250 | 250 | 200 | 150 | 150 | | | | | | | | | | | | | | | | |
| வெலிப்பென்ன | 450 | 400 | 350 | 400 | 300 | 300 | 250 | 250 | 200 | 200 | 100 | | | | | | | | | | | | | | | |
| குருந்துகஹஹெத்தப்ம | 500 | 450 | 400 | 450 | 400 | 350 | 350 | 300 | 250 | 250 | 150 | 150 | | | | | | | | | | | | | | |
| பத்தேகம | 550 | 500 | 450 | 500 | 450 | 400 | 400 | 350 | 300 | 250 | 200 | 200 | 100 | | | | | | | | | | | | | |
| பின்னதுவ | 600 | 550 | 500 | 550 | 500 | 450 | 450 | 400 | 350 | 300 | 250 | 250 | 150 | 150 | | | | | | | | | | | | |
| இமாதுவ | 650 | 600 | 550 | 600 | 550 | 500 | 500 | 450 | 400 | 350 | 300 | 300 | 250 | 200 | 100 | | | | | | | | | | | |
| கொக்மதுவ | 700 | 650 | 600 | 650 | 550 | 500 | 500 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 | | | | | | | | | | |
| கொடகம | 700 | 650 | 600 | 650 | 600 | 550 | 550 | 500 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 | | | | | | | | | |
| அப்பரெக்க | 750 | 700 | 650 | 700 | 600 | 600 | 550 | 550 | 550 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 | | | | | | | | |
| பெலியத்த | 800 | 750 | 700 | 750 | 650 | 650 | 650 | 600 | 600 | 550 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 200 | 150 | | | | | | | |
| கஸகல | 850 | 800 | 750 | 800 | 700 | 700 | 650 | 650 | 650 | 600 | 550 | 500 | 400 | 400 | 350 | 300 | 250 | 200 | 200 | 100 | | | | | | |
| அங்குனகொலபெலஸ்ஸ | 850 | 800 | 750 | 800 | 750 | 700 | 700 | 700 | 650 | 650 | 550 | 550 | 450 | 400 | 350 | 300 | 300 | 250 | 200 | 150 | 150 | | | | | |
| பறவக்கும்புக்க | 900 | 850 | 800 | 850 | 750 | 750 | 700 | 700 | 700 | 650 | 600 | 550 | 500 | 450 | 400 | 350 | 300 | 300 | 250 | 200 | 150 | 100 | | | | |
| சூரியவெவ | 950 | 900 | 850 | 900 | 800 | 750 | 750 | 750 | 700 | 700 | 600 | 600 | 500 | 450 | 400 | 400 | 350 | 300 | 300 | 250 | 200 | 150 | 150 | | | |
| மத்தள வாயில் | 950 | 900 | 850 | 900 | 850 | 800 | 800 | 750 | 750 | 750 | 650 | 600 | 550 | 500 | 450 | 400 | 400 | 350 | 300 | 250 | 200 | 200 | 150 | 150 | | |
| அம்பாந்தோட்டை வாயில் | 1000 | 950 | 900 | 950 | 900 | 850 | 850 | 800 | 800 | 750 | 700 | 650 | 600 | 550 | 500 | 450 | 450 | 400 | 350 | 300 | 250 | 250 | 200 | 200 | 150 | |

வகுதி 2 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா) (இரு அச்சாணிகளும் நான்கு சக்கரங்களும் கொண்ட வாகனங்கள்

| தூரம் | 8.7 கிமீ | 7.3 கிமீ | 6.7 கிமீ | 16.5 கிமீ | 9.35 கிமீ | 4.8 கிமீ | 5.1 கிமீ | 6 கிமீ | 8 கிமீ | 21 கிமீ | 11 கிமீ | 22 கிமீ | 12 கிமீ | 16 கிமீ | 12.4 கிமீ | 7.9 கிமீ | 9.9 கிமீ | 11 கிமீ | 15.5 கிமீ | 12.2 கிம | 9.1 கிமீ | 7.1 கிமீ | 10.3 கிமீ | 10.5 கிமீ | 20.7 கிமீ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுநாயக்க (வெளியேறல் - B4) | ஜா - எல (வெளியேறல் - B3) | கெரவலப்பிட்டிய (வெளியேறல் - B2) | பேலியகொட (வெளியேறல் - B1) | கடவத்த (வெளியேறல் - C4) | கடுவெல (வெளியேறல் -C3) / கொத்தலாவல (வெளியேறல் -C2) | அத்துருகிரிய (வெளியேறல் - C1) | கொட்டாவ (வெளியேறல் - A1) | கஹதுடுவ (வெளியேறல் - A2) | கெலனிகம (வெளியேறல் - A3) | தொடங்கொட (வெளியேறல் - A4) | வெலிப்பென்ன (வெளியேறல் - A5) | குருந்துகஹஹெதெக்ம (வெளியேறல் -A6) | பத்தேகம (வெளியேறல் - A7) | பின்னதுவ (வெளியேறல் - A8) | இமாதுவ (வெளியேறல் - A9) | கொக்மதுவ (வெளியேறல் - A10) | கொடகம (வெளியேறல் - A11) | அப்பரெக்க (வெளியேறல் - A12) | பெலியத்த (வெளியேறல் - A13) | கஸகல (வெளியேறல் - A14) | அங்குனகொலபெலஸ்ஸ (வெளியேறல் - A15) | பறவக்கும்புக்க (வெளியேறல் - A16) | சூரியவெவ (வெளியேறல் - A17) | மத்தள வாயில் (வெளியேறல் - A18) | அம்பாந்தோட்டை வாயில் (வெளியேறல் - A19) |
| ஜா - எல | 300 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கெரவலபிட்டிய | 250 | 100 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பேலியகொட | 450 | 350 | 100 | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கடவத்த | 400 | 250 | 150 | 250 | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கடுவெல/கொத்தலாவல | 450 | 300 | 200 | 300 | 150 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| அத்துருகிரிய | 500 | 350 | 250 | 350 | 150 | 100 | | | | | | | | | | | | | | | | | | | | |
| கொட்டாவ | 550 | 400 | 300 | 400 | 200 | 150 | 150 | | | | | | | | | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 550 | 400 | 300 | 400 | 250 | 200 | 150 | 150 | | | | | | | | | | | | | | | | | | |
| கெலினிகம | 600 | 450 | 350 | 450 | 300 | 250 | 200 | 200 | 150 | | | | | | | | | | | | | | | | | |
| தொடங்கொட | 750 | 600 | 500 | 600 | 400 | 350 | 350 | 300 | 250 | 200 | | | | | | | | | | | | | | | | |
| வெலிப்பென்ன | 800 | 650 | 550 | 650 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 150 | | | | | | | | | | | | | | | |
| குருந்துகஹஹெத்தப்ம | 950 | 800 | 700 | 800 | 600 | 550 | 550 | 500 | 450 | 400 | 300 | 250 | | | | | | | | | | | | | | |
| பத்தேகம | 1050 | 900 | 800 | 900 | 700 | 650 | 650 | 600 | 550 | 500 | 350 | 300 | 200 | | | | | | | | | | | | | |
| பின்னதுவ | 1150 | 1000 | 900 | 1000 | 800 | 750 | 750 | 700 | 650 | 600 | 450 | 400 | 250 | 200 | | | | | | | | | | | | |
| இமாதுவ | 1200 | 1050 | 950 | 1050 | 900 | 850 | 800 | 800 | 750 | 700 | 550 | 500 | 350 | 300 | 150 | | | | | | | | | | | |
| கொக்மதுவ | 1250 | 1100 | 1000 | 1100 | 950 | 900 | 850 | 850 | 800 | 750 | 600 | 550 | 400 | 350 | 200 | 150 | | | | | | | | | | |
| கொடகம | 1350 | 1200 | 1100 | 1200 | 1000 | 950 | 950 | 900 | 850 | 800 | 700 | 600 | 450 | 400 | 300 | 200 | 150 | | | | | | | | | |
| அப்பரெக்க | 1400 | 1250 | 1150 | 1250 | 1100 | 1050 | 1000 | 950 | 950 | 900 | 750 | 700 | 550 | 450 | 350 | 300 | 250 | 150 | | | | | | | | |
| பெலியத்த | 1500 | 1350 | 1250 | 1350 | 1200 | 1150 | 1100 | 1050 | 1050 | 1000 | 850 | 800 | 650 | 550 | 450 | 400 | 350 | 250 | 200 | | | | | | | |
| கஸகல | 1600 | 1450 | 1350 | 1450 | 1250 | 1200 | 1200 | 1150 | 1100 | 1050 | 950 | 850 | 700 | 650 | 550 | 450 | 400 | 350 | 250 | 150 | | | | | | |
| அங்குனகொலபெலஸ்ஸ | 1650 | 1500 | 1400 | 1500 | 1350 | 1250 | 1250 | 1200 | 1150 | 1100 | 1000 | 900 | 750 | 700 | 600 | 500 | 450 | 400 | 350 | 250 | 150 | | | | | |
| பறவக்கும்புக்க | 1700 | 1550 | 1450 | 1550 | 1400 | 1300 | 1300 | 1250 | 1200 | 1150 | 1050 | 950 | 800 | 750 | 650 | 550 | 500 | 450 | 400 | 300 | 200 | 150 | | | | |
| சூரியவெவ | 1750 | 1600 | 1500 | 1600 | 1450 | 1400 | 1350 | 1300 | 1300 | 1250 | 1100 | 1000 | 900 | 800 | 700 | 650 | 600 | 500 | 450 | 350 | 250 | 200 | 150 | | | |
| மத்தள வாயில் | 1800 | 1650 | 1550 | 1650 | 1500 | 1450 | 1400 | 1400 | 1350 | 1300 | 1150 | 1100 | 950 | 850 | 800 | 700 | 650 | 600 | 500 | 400 | 350 | 300 | 250 | 150 | | |
| அம்பாந்தோட்டை வாயில் | 1900 | 1750 | 1650 | 1750 | 1600 | 1550 | 1500 | 1450 | 1450 | 1400 | 1250 | 1150 | 1050 | 950 | 850 | 800 | 750 | 650 | 600 | 500 | 400 | 350 | 300 | 250 | 250 | |

வகுதி 3 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா) (இரண்டுக்கு மேற்பட்ட அச்சாணிகளைக் கொண்ட வாகனங்கள்

| தூரம் | 8.7 கிமீ | 7.3 கிமீ | 6.7 கிமீ | 16.5 கிமீ | 9.35 கிமீ | 4.8 கிமீ | 5.1 கிமீ | 6 கிமீ | 8 கிமீ | 21 கிமீ | 11 கிமீ | 22 கிமீ | 12 கிமீ | 16 கிமீ | 12.4 கிமீ | 7.9 கிமீ | 9.9 கிமீ | 11 கிமீ | 15.5 கிமீ | 12.2 கிம | 9.1 கிமீ | 7.1 கிமீ | 10.3 கிமீ | 10.5 கிமீ | 20.7 கிமீ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டுநாயக்க (வெளியேறல் - B4) | ஜா - எல (வெளியேறல் - B3) | கெரவலபிட்டிய (வெளியேறல் - B2) | பேலியகொட (வெளியேறல் - B1) | கடவத்த (வெளியேறல் - C4) | கடுவெல (வெளியேறல் -C3) / கொத்தலாவல (வெளியேறல் -C2) | அத்துருகிரிய (வெளியேறல் - C1) | கொட்டாவ (வெளியேறல் - A1) | கஹதுடுவ (வெளியேறல் - A2) | கெலனிகம (வெளியேறல் - A3) | தொடங்கொட (வெளியேறல் - A4) | வெலிப்பென்ன (வெளியேறல் - A5) | குருந்துகஹஹெத்தம்ம (வெளியேறல் -A6) | பத்தேகம (வெளியேறல் - A7) | பின்னதுவ (வெளியேறல் - A8) | இமாதுவ (வெளியேறல் - A9) | கொக்மதுவ (வெளியேறல் - A10) | கொடகம (வெளியேறல் - A11) | அப்பரெக்க (வெளியேறல் - A12) | பெலியத்த (வெளியேறல் - A13) | கஸகல (வெளியேறல் - A14) | அங்குனகொலபெலஸ்ஸ (வெளியேறல் - A15) | பறவக்கும்புக்க (வெளியேறல் - A16) | சூரியவெவ (வெளியேறல் - A17) | மத்தள வாயில் (வெளியேறல் - A18) | அம்பாந்தோட்டை வாயில் (வெளியேறல் - A19) |
| ஜா - எல | 300 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கெரவலபிட்டிய | 300 | 150 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பேலியகொட | 600 | 400 | 150 | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கடவத்த | 500 | 350 | 200 | 350 | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கடுவெல/கொத்தலாவல | 600 | 450 | 300 | 450 | 200 | | | | | | | | | | | | | | | | | | | | | |
| அத்துருகிரிய | 650 | 500 | 350 | 500 | 250 | 150 | | | | | | | | | | | | | | | | | | | | |
| கொட்டாவ | 700 | 550 | 400 | 550 | 300 | 200 | 150 | | | | | | | | | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 750 | 600 | 450 | 600 | 350 | 300 | 250 | 150 | | | | | | | | | | | | | | | | | | |
| கெலனிகம | 850 | 700 | 550 | 700 | 450 | 350 | 300 | 250 | 200 | | | | | | | | | | | | | | | | | |
| தொடங்கொட | 1100 | 950 | 800 | 950 | 650 | 600 | 550 | 450 | 400 | 300 | | | | | | | | | | | | | | | | |
| வெலிப்பென்ன | 1250 | 1100 | 950 | 1100 | 800 | 750 | 650 | 600 | 500 | 450 | 250 | | | | | | | | | | | | | | | |
| குருந்துகஹஹெத்தம்ம | 1500 | 1350 | 1200 | 1350 | 1050 | 1000 | 950 | 850 | 800 | 700 | 450 | 300 | | | | | | | | | | | | | | |
| பத்தேகம | 1650 | 1500 | 1350 | 1500 | 1200 | 1150 | 1100 | 1000 | 950 | 850 | 600 | 450 | 250 | | | | | | | | | | | | | |
| பின்னதுவ | 1800 | 1650 | 1500 | 1650 | 1400 | 1300 | 1250 | 1200 | 1150 | 1050 | 750 | 650 | 350 | 250 | | | | | | | | | | | | |
| இமாதுவ | 1950 | 1800 | 1650 | 1800 | 1550 | 1450 | 1400 | 1350 | 1250 | 1200 | 900 | 800 | 500 | 350 | 200 | | | | | | | | | | | |
| கொக்மதுவ | 2050 | 1900 | 1750 | 1900 | 1650 | 1550 | 1500 | 1400 | 1350 | 1250 | 1000 | 850 | 600 | 450 | 250 | 200 | | | | | | | | | | |
| கொடகம | 2150 | 2000 | 1850 | 2000 | 1750 | 1650 | 1600 | 1550 | 1450 | 1400 | 1150 | 1000 | 750 | 600 | 400 | 250 | 200 | | | | | | | | | |
| அப்பரெக்க | 2250 | 2100 | 1950 | 2100 | 1900 | 1800 | 1750 | 1650 | 1600 | 1500 | 1250 | 1150 | 900 | 750 | 550 | 450 | 350 | 250 | | | | | | | | |
| பெலியத்த | 2450 | 2300 | 2150 | 2300 | 2050 | 1950 | 1900 | 1850 | 1800 | 1700 | 1450 | 1300 | 1050 | 950 | 750 | 600 | 500 | 400 | 250 | | | | | | | |
| கஸகல | 2600 | 2450 | 2300 | 2450 | 2200 | 2100 | 2050 | 2000 | 1900 | 1850 | 1600 | 1450 | 1200 | 1050 | 900 | 750 | 650 | 550 | 400 | 200 | | | | | | |
| அங்குனகொலபெலஸ்ஸ | 2700 | 2550 | 2400 | 2550 | 2300 | 2200 | 2150 | 2100 | 2050 | 1950 | 1700 | 1550 | 1300 | 1150 | 1000 | 850 | 750 | 650 | 550 | 350 | 200 | | | | | |
| பறவக்கும்புக்க | 2800 | 2650 | 2500 | 2650 | 2400 | 2300 | 2250 | 2200 | 2100 | 2000 | 1800 | 1650 | 1400 | 1250 | 1100 | 950 | 850 | 750 | 600 | 450 | 300 | 200 | | | | |
| சூரியவெவ | 2900 | 2750 | 2600 | 2750 | 2500 | 2400 | 2350 | 2300 | 2250 | 2150 | 1900 | 1750 | 1500 | 1350 | 1200 | 1050 | 950 | 850 | 750 | 550 | 400 | 300 | 200 | | | |
| மத்தள வாயில் | 3000 | 2850 | 2700 | 2850 | 2650 | 2550 | 2500 | 2400 | 2350 | 2250 | 2000 | 1900 | 1650 | 1500 | 1300 | 1150 | 1100 | 950 | 850 | 650 | 550 | 400 | 350 | 200 | | |
| அம்பாந்தோட்டை வாயில் | 3150 | 3000 | 2850 | 3000 | 2800 | 2700 | 2600 | 2550 | 2500 | 2400 | 2150 | 2050 | 1800 | 1650 | 1450 | 1300 | 1250 | 1100 | 1000 | 800 | 650 | 550 | 500 | 350 | 350 | |

(ஒழுங்குவிதி 7)

பாகம் ஆ

தெற்கு பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை (தெற்கு கடுகதிப்பாதை), வெளிப்புறச் சுற்றுவட்ட பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு – கட்டுநாயக்க பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை என்பவற்றின் மீதான பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும் வாகனங்கள்

1. ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் சனாதிபதி தொடரணியின் பாகமாக அமைந்துள்ள எல்லா வாகனங்களும் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக செலுத்தப்படும் வரை அத்தகைய வாகனம்.

2. ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் பிரதம அமைச்சரின் தொடரணியின் பாகமாக அமைந்துள்ள எல்லா வாகனங்களும் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக செலுத்தப்படும் வரை அத்தகைய வாகனம்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.